# 19 மாவட்டங்களில் பலத்த மழை எச்சரிக்கை

**சென்னை, நவ. 3:** தமிழகத்தில் 19 மாவட்டங்களில் சனிக்கிழமை (நவ. 4) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பருவமழை முன்னெச்சரிக்கையாக 12 பேரிடர் மீட்புப் படைக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் 80 மி.மீ. மழையும், கடலூர் மாவட்டம் அண்ணாமலை நகர், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை, ராதாபுரம், காக்காச்சி ஆகிய இடங்களில் தலா 70 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

இந்நிலையில், மாநிலத்தில் 19 மாவட்டங்களில் சனிக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பு:

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சனிக்கிழமை (நவ. 4) பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த அல்லது மிக பலத்த மழையும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருப்பூர், ஈரோடு, தென்காசி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் பலத்த மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

## தயார் நிலையில் மீட்புக் குழுக்கள்



சென்னையில் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் வேளச்சேரி அருகே பல்லாவரம் – துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் பெருக்கெடுத்து ஓடிய நீரில் ஊர்ந்து சென்ற வாகனங்கள்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அவ்வப்போது மிதமான மழையும், ஒருசில நேரங்களில் இடி-மின்னலுடன் கூடிய பலத்த மழையும் பெய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**மீட்புக் குழுக்கள்:** பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 400 வீரர்களைக் கொண்ட 12 பேரிடர் மீட்புப் படைக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவமழையையொட்டி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து, சென்னை சேப்பாக்கம் எழிலகத்திலுள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:

வடகிழக்குப் பருவமழையின் இதுவரையிலான காலத்தில் ஒரு மாவட்டத்தில் அதிகமான மழைப் பொழிவும், 30 மாவட்டங்களில் குறைவான மழைப் பொழிவும், ஏழு மாவட்டங்களில் இயல்பான மழைப் பொழிவும் ஏற்பட்டுள்ளது. மழையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ள மாநில, மாவட்ட அளவில் அவசரகால செயல்பாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன.

மாநில மையத்தை 1070 என்ற எண்ணிலும், மாவட்ட மையத்தை 1077 என்ற எண்ணிலும் கட்டணமில்லாமல் தொடர்பு கொள்ளலாம். 94458 69848 என்ற கைப்பேசி வாட்ஸ்அப் மூலமும் புகார்களைப் பதிவு செய்யலாம். பேரிடர் காலங்களில் பொதுவான எச்சரிக்கைத் தகவல்கள் பொதுமக்களுக்கு அனுப்பப்படும்.

தமிழ்நாட்டில் முக்கிய அணைகளான வைகை, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, கிருஷ்ணகிரி, சாத்தனூர் அணைகளிலும், சென்னைக்கு குடிநீர் வழங்கும் செங்குன்றம், செம்பரம்பாக்கம் மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கங்களிலும் 75 சதவீதத்துக்கு மேல் நீர் இருப்பு உள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டம் பழனி, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, கோவை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 400 வீரர்களைக் கொண்ட 12 குழுக்கள் தயார் நிலையில் உள்ளன என்றார் அவர்.

ஆய்வின்போது, வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ.ராமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மலையகத் தமிழர் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் தேவை

## முதல்வர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, நவ. 3:** மலையகத் தமிழர்களைச் சேர்ந்த குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள், இலங்கைக்குச் சென்று 200 ஆண்டுகளானதை நினைவு கூரும் வகையில், இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்த நிகழ்வில், காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள். அங்குள்ள தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு, இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்ப காலம் முதல் தொடங்குகிறது. காப்பித் தோட்டங்கள் பெருகப் பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பி தோட்டத்தையடுத்து தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அவற்றையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினர். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான். இப்படி கடந்த 200 ஆண்டுகளாக இலங்கையில் நல்வாழ்வுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இன்னும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

திமுக தோன்றிய காலம் முதலே புலம்பெயர் தமிழர்களது உரிமைகளைக் காப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறது. மலையகத் தமிழர்கள் நமது மாநிலத்துக்குத் திரும்பிய போது அவர்களை அரவணைத்து தமிழக மலைப் பகுதிகளில் குடியமர்த்திடான்டீ, அரசு ரப்பர் தோட்டங்கள் மூலம் அவர்களது வாழ்வு உயர வழிவகை செய்தோம். அந்த உணர்வோடுதான் அனைத்துப் பிரச்னைகளையும் அணுகி துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். உரிமை காக்கவும் உதவிகள் செய்து வருகிறோம். அந்த வகையில், மலையகத் தமிழ் மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும்.

மலையக தமிழர்களின் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போன்று, கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

# வடகிழக்குப் பருவமழை 40% குறைவு

## பாலச்சந்திரன் தகவல்

**சென்னை, நவ.3:** தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது முதல் தற்போது வரை 120 மி.மீ. அளவு மழை பதிவாகி உள்ளது. இயல்பு அளவு 190 மி.மீ. ஆகும். இது இயல்பை விட 40 சதவீதம் குறைவு என வானிலை ஆய்வு மைய தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன் கூறினார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் அவர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: கடந்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் பெரும்பான்மையான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்துள்ளது.

தற்போது தென் மேற்கு வங்கக் கடல்மற்றும்அதையொட்டிஉள்ள மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் வளிமண்டல மேல் அடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் அடுத்த 3 நாள்களுக்கு தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். அடுத்த 24 மணி நேரத்தில் குமரி, நெல்லை, தென்காசி, தேனி, திண்டுக்கல்லில் ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளது. அதே போல, நீலகிரி, கோவை, ஈரோடு, விருதுநகர், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, திருப்பூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புற நகர் பகுதிகளில் அவ்வப்போது மிதமான மழை பெய்யக்கூடும். சில நேரங்களில் பலத்த மழை பெய்யக்கூடும்.

வட கிழக்குப் பருவ மழையைப் பொறுத்தவரை தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் அக்டோபர் 1 முதல் தற்போது வரை 120 மில்லி மீட்டர் அளவு மழை பதிவாகி உள்ளது. வழக்கமான அளவு 190 மில்லி மீட்டர் ஆகும். இது இயல்பை விட 40 சதவீதம் குறைவு.

வட கிழக்குப் பருவ மழை பரவலாக பெய்து வருகிறது. காற்றின் வேகம் அதிகமாக இருந்தாலும் மழையின் அளவு குறைவாகவே இருக்கும். பருவக்காற்று வலுவடைந்துள்ளது. காற்றில் ஈரப்பதம் அதிகரிப்பு, வளிமண்டல சுழற்சி உள்ளிட்ட காரணங்களால் மழைக்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடலில் இருந்து நிலப்பகுதிக்கு வரும் காற்றின் வெப்பநிலை, நிலப் பகுதியில் உள்ள வெப்பநிலை வேறுபாடு காரணமாக சென்னை உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. அதிக மழைப் பொழிவை ஏற்படுத்தும் காரணிகள் இல்லை என்றாலும், பரவலாக பருவமழை பெய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

Activate Windows
Go to Settings to activate Windows



# இஸ்ரேல் - அமைதி தோன்றுமா?

**இஸ்ரேலியர்களைப் போல அழகானவர்கள் இந்த உலகில் வேறு யாருமில்லை. அவர்களுக்கு நிகரான மதிநுட்பம் கொண்டவர்களும் எவரும் கிடையாது என்கிறது விவிலியத்தின் ஏற்பாடு.**

கோதை ஜோதிலட்சுமி

# தீர்வுகளின் திசை

முனைவர் என். மாதவன்

வீடானாலும் நாடானாலும் அனுதினம் பல்வேறு சவால்களுடனேயே வாழ்வைக் கடந்து வருகிறோம். சவால்களைச் சமாளிக்கும் முறைகளில் சிலவற்றைத் தனியாகவே சமாளித்துவிடலாம். சிலவற்றைக் கூட்டாகத்தான் சமாளிக்க வேண்டியிருக்கும். பொதுவாக ஒருவரின் குடும்பம் சார்ந்த சவால்கள் அந்த குடும்பத் தலைவராலோ அல்லது குடும்ப உறுப்பினர்களில் அனுபவம் நிறைந்தவர்களாலோ சமாளித்து தீர்க்கப்படுவதாய் அமையும்.

அதுபோலவே சமூகத்திலுள்ள சவால்கள் பொதுவாக சமூகத்தின் சவால்களாயிருப்பினும், அவற்றிலும் பலவற்றைத் தனியாகச் சமாளிக்க இயலும். ஆனால், பெரும்பாலானவற்றைக் கூட்டாகவே சமாளிக்க வேண்டிவரும். எனவேதான் சமூகத்தின் சவால்களைத்தீர்ப்பதற்கு பல்வேறு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு செயல்பட்டு வரும் அமைப்புகளில் ஒரு பகுதியில் குடியிருப்போர் சேர்ந்து அமைக்கும் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவ்வாறு அமைப்பாகச் சேர்ந்து செயல்படுவது கூடுதல் பலத்தையும், அதற்குத் தேவையான பொருளாதார வளத்தையும் அளிப்பதாக இருக்கும். கூட்டாகச் செயல்பட்டுத் தீர்க்க வாய்ப்புள்ள சவால்கள், தனித் தனியாகச் செயல்பட்டு தீர்க்க வாய்ப்புள்ள சவால்கள் என சவால்களை இரண்டு வகையாகப் பிரிக்க முடியும்.

பல நண்பர்களிடம் நான் இரு சவால்களைப் பகிர்ந்து அந்தச் சவால்களை எப்படி தீர்க்க வாய்ப்புள்ளது என்று கேட்பேன். எடுத்துக்காட்டாக, ஒரு குடியிருப்புக்குத் தேவையான தண்ணீர் வசதி மற்றும் அங்கு காணப்படும் கொசுக்களை ஒழிப்பது. இந்த இரண்டு சவால்களையும் எப்படித் தீர்க்கலாம் என்று பல முறை கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் கொசு பிரச்னையை அவரவர்களே தீர்த்துக் கொள்ளலாம் எனவும் தண்ணீர்ப் பிரச்னையை உள்ளாட்சி அமைப்புகள்தான் தீர்த்து வைக்கவேண்டும் எனவும் தீர்வாகப் பகிர்ந்தனர்.

இந்த சவால்களுக்கான தீர்வாக அவர்கள் சொன்னது, அந்தச் சவால்களை ஒவ்வொரு நாளும் அவர்கள் தீர்த்துக் கொள்வதிலிருந்து வந்த தீர்வே. மேலோட்டமாகப் பார்க்கும்போது அது சரியெனவும் தோன்றும். ஏனெனில் கொசு ஒழிப்புக்காக அவர்கள் செய்யும் பணி என்ன? தனித் தனியாக கொசுவர்த்திகளை அல்லது அதற்கான திரவங்கள் ஆவியாகும் இயந்திரங்களை அவரவர் வீடுகளில் பயன்படுத்துகின்றனர். அவரவர் வீடுகளிலும் ஒவ்வொரு அறைக்கும் தனித் தனியாகப் பயன்படுத்துகின்றனர்.

அதுபோலவே உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் மூலம் அவர்கள் வீட்டுக்கு வரும் தண்ணீரைப் பிடித்து வைத்துப் பயன்படுத்துகின்றனர். கிராமப்புறங்களில் இன்று பலரின் வீடுகளில் நேரடியாக தெருக்குழாயிலிருந்தே மோட்டார் வைத்து தண்ணீரை அளவுக்கதிகமாக எடுத்துக் கொள்கின்றனர். இப்படியே போனால் எத்தனை நாள்களுக்கு இவ்வாறு தண்ணீர் கிடைக்கும் என்ற உணர்வே பலரிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவை இரண்டுமே தவறில்லை. ஆனால், இரண்டு சவால்களுக்கான தற்காலிகமாக ஏற்பட்ட தீர்வு தொடர் தீர்வாக மாறிவருகிறது. இதை இப்படிப் பார்ப்போம். சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் 100 மணி நேரம் மழை பொழிவதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. இவ்வாறு 100 மணி நேரம் பொழியும் மழையின் தண்ணீரானது, பெரும்பாலும் சாக்கடை நீரில் கலந்து ஏதோ ஒரு இடத்தில் பயன்படுத்த இயலாத பெரிய கழிவுநீர்க் குட்டை போன்ற அமைப்பில் கலக்கிறது.

இதில் ஒரு பகுதியையாவது மழைநீர் சேமிப்பு அமைப்பின் மூலம் அவரவர் வீடுகளிலிருக்கும் சுற்றுப்புறத்தில் சேமித்தால் இயல்பான தேவைகளுக்கான தண்ணீராக கிணறு அல்லது ஆழ்துளைக்கிணறு மூலம் பயன்படுத்த முடியும். குடிநீருக்காக மட்டும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கலாம். ஒருபெரிய சமூக சவாலாக தண்ணீர்ப் பிரச்னை உருவாகாமல் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும் இவ்வாறு செயல்பட முடியும்.

அதுபோலவே கொசு ஒழிப்பில் பயன்படுத்தப்பட்ட தற்காலிகத் தீர்வுகள் கொசுக்களை ஒழிப்பதற்குப் பதிலாக அகற்றுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன.

கொசுக்களின் ஆயுள் சுமார் 25 நாள்கள் என்பதால், சில மாதங்களுக்குள்ளாகவே அடுத்தடுத்த தலைமுறைகளை அது எட்டிவிடுகிறது. இப்படிப்பட்ட கொசுக்களின் மூலம் உண்டாகும் சவால்களைத் தனித் தனி நபர்களாகத் தீர்த்துக்கொண்டிருந்தால் நம்மால் என்றைக்கும் வெற்றி காணவே முடியாது. இதை அரசும் உள்ளாட்சி அமைப்பும் கையிலெடுக்கும் மக்கள் இயக்கமாக மாற்றினால்தான் தீர்வு கிடைக்கும்.

குழந்தை வளர்ப்பு, சுற்றுச்சூழலில் தூய்மைப் பராமரிப்பு போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூற முடியும். ஒரு குழந்தையை வளர்க்க ஒரு கிராமமே தேவை என்று ஒரு பழமொழியே உள்ளது. ஒரு கிராமத்தில் அந்தந்த பெற்றோர் மட்டும் குழந்தைகளை வளர்ப்பது ஒரு குறிப்பிட்ட சூழல் வரை சாத்தியம். என்றைக்கு அந்தக் குழந்தை வீட்டைக் கடந்து சமூகத்தில் புழங்கத் தொடங்குகிறதோ, அன்றைக்கு அந்தக் குழந்தையை நெறிப்படுத்துவதில் பகுதியளவிலான பங்களிப்பையே அந்தக் குடும்பம் மேற்கொள்ள முடியும்.

மீதமுள்ள நேரத்தை அவன், அவள் புழங்கும் சமூகமே மேற்கொள்ள வேண்டும். அவர்கள் நெறிதவறி புழங்கும் இடங்களில் சமூகம் நெறிப்படுத்தும் ஏற்பாடு நிறைய வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளால் அந்தக் குடும்பத்துக்கு மட்டுமல்ல, மாறாக இந்தச் சமூகத்துக்கே உதவும் மனப்பான்மை கொண்ட இளைஞர்கள் உருவாவர்.

அதுபோலவே ஒரு வீட்டின் அறையிலிருக்கும் வரைதான் குப்பைகள் அந்த வீட்டின் குப்பையாக இருக்கும். என்றைக்கு அது வீட்டின் வாசலைத் தாண்டி சாலைக்கு வருகிறதோ, அன்றைக்கு அது பொதுக் குப்பையாக மாறுகிறது. வீட்டைப் பராமரிப்பதுபோல தெருவையும் பராமரிக்கும் நல்ல மனம் படைத்தவர்களால்தான் நல்ல தெருக்கள் உருவாகும். அதை குப்பைத் தொட்டியை அடையச் செய்வதில், தனி மனிதரின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதால்தான் சாத்தியமாகும்.

அவ்வாறு குப்பைத் தொட்டிகளை மட்டும் உள்ளாட்சி நிர்வாகம் சுத்தம் செய்வது எவ்வளவு எளிமையான செயலாக இருக்கும். இந்த இடத்தில் தனி நபர்களின் பொறுப்பான செயல்பாடுகளால் தெருவும் ஊரும் அழகாகும்.

## பஞ்சாப் நேஷனல், ஃபெடரல் வங்கிகளுக்கு ரூ.1 கோடி அபராதம்

### ரிசர்வ் வங்கி உத்தரவு

**மும்பை, நவ.3:** வாடிக்கையாளர்களின் சேவை விதிமுறைகளை மீறியதற்காக பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு (பிஎன்பி) ரூ.72 லட்சமும், ஃபெடரல் வங்கிக்கு ரூ.30 லட்சமும் அபராதம் விதித்து ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள் மற்றும் வட்டி விகிதங்களில் விதிமுறைகளை மீறி செயல்பட்டதற்காக அரசு வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு ரூ.72 லட்சம் அபராதமும், வாடிக்கையாளர் விவரம் அறிதல் (கேஒய்சி)- 2016 வழிகாட்டி விதிமுறைகளை மீறியதற்காக தனியார் வங்கியான ஃபெடரல் வங்கிக்கு ரூ.30 லட்சம் அபராதத்தை ரிசர்வ் வங்கி விதித்தது.

இதேபோல் கேஒய்சி வழிகாட்டி விதிமுறைகளை மீறியதற்காக மெர்சிடிஸ்-பென்ஸ் நிதிச் சேவைகள் நிறுவனத்துக்கு ரூ.10 லட்சமும், மிக முக்கியமான வங்கிகள் அல்லாத நிதி நிறுவன விதிமுறைகள் -2016 மீறியதற்காக கோட்டயம் கொசமட்டம் ஃபைனான்ஸ் நிறுவனத்துக்கு ரூ.13.38 லட்சம் அபராதத்தையும் ரிசர்வ் வங்கி விதித்தது.

இந்த அபராதங்கள் அனைத்தும் சேவை விதிமுறை மீறலுக்காகவே விதிக்கப்பட்டவை என்றும் வாடிக்கையாளர்களுடன் நிறுவனங்கள் கொண்டுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்காக விதிக்கப்படவில்லை என்றும் ரிசர்வ் வங்கி விளக்கமளித்தது.

## தபால் வழியாக ரூ.2,000 நோட்டுகளை மாற்றலாம்: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

**புது தில்லி, நவ3:** தபால் வழியாக ரூ.2,000 நோட்டுகளை ரிசர்வ் வங்கி அலுவலகங்களுக்கு அனுப்பி நேரடியாக வங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளலாம் என ரிசர்வ் வங்கி வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் கைவசம் உள்ள ரூ.2,000 நோட்டுகளை மாற்றிக் கொள்ளவும் தங்களது வங்கி கணக்கில் பற்று வைத்துக் கொள்ளவும் அக்டோபர்- 7 வரை மத்திய அரசு அவகாசம் அளித்தது. அதன் பின்னர் ரிசர்வ் வங்கியின் 19 கிளை அலுவலகங்களில் ரூ.2,000 நோட்டுகளை மாற்றிக் கொள்ளவோ அல்லது தங்களுடைய வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவோ ரிசர்வ் வங்கி அனுமதி அளித்தது. இதற்கு எவ்வித கால அவகாசமும் தற்போது வரை விதிக்கப்படவில்லை.



புது தில்லியில் உள்ள ரிசர்வ் வங்கி அலுவலகத்தில் ரூ.2,000 நோட்டுகளை மாற்ற காத்திருந்த பொதுமக்கள் (கோப்புப் படம்).

இந்நிலையில் ரிசர்வ் வங்கி கிளை அலுவலகங்களில் ரூ.2,000 நோட்டுகளை மாற்ற மக்கள் கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தபால் வழியாக ரிசர்வ் வங்கி அலுவலகங்களுக்கு அனுப்பி, தொகையை தங்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளலாம் என ஆர்பிஐ அறிவித்துள்ளது.

# ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை



ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**சென்னை, நவ. 3:** மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஏழு பேருக்கு உயரிய ஊக்கத் தொகைகள் அளிக்கப்பட்டன. இவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

சீன நாட்டின் ஹாங்சூவில், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அதில், தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீரர்கள் டி.சோலைராஜ், டி.மாரியப்பன், முத்து ராஜா, எம். துளசிமதி, மனிஷா ராமதாஸ், சிவராஜன், எஸ்.நித்யா ஸ்ரீ சுமதி ஆகியோர் பதக்கங்களை வென்றுள்ளனர். அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.3.80 கோடிக்கான காசோலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற 11 வீரர்- வீராங்கனைகளுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ.22 லட்சத்துக்கான காசோலைகளையும் அமைச்சர் உதயநிதி அளித்தார்.

அமைச்சரின் முகாம் இல்லத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**வீரர்களுக்கு வரவேற்பு:** பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற தமிழக வீரர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை காலை சென்னை திரும்பினர். அவர்களுக்கு விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ACADEMY